Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.67/2021**

**Deposition of PW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :அழகர்சாமி | ஜாதி | : |
| த/பெ | :முத்துப்பாண்டி | தொழில் | :கூலி வேலை |
| கிராமம் | :ராமநாதபுரம் | சமயம் | : |
| தாலுகா | :ஆத்துார் | வயது | :36/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.08.2023.

(Accused A1 present. Accused A2 absent. Petition filed U/s.317 Cr.P.C. allowed)

முதல் விசாரணை

நான் ராமநாதபுரத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 30.07.2021 அன்று இரவு 07.00 மணியளவில் ராமநாதபுரம் மாவட்டம் தோட்டம் அருகே ஒருவரை வெட்டி போட்டு கிடப்பதாக தகவல் தெரிந்து அங்கு சென்றேன். அங்கு இடத்தை பார்வையிடுவதற்காக போலீசார் வந்தார்கள். அப்போது என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பார்வை மகசரில் நானும் பாலமுருகனும் தான் கையொப்பம் செய்தோம் நான் நாமநாதபுரத்தில் முக்கியமான ஆள் என்றால்ட சரிதான். எங்கள் ஊரில் எந்த பிரச்சனை வந்தாலும் நான் தான் காவல்நிலையம் சென்று பேச்சு வார்த்தை நடத்துவேன். அவ்வாறு காவல்நிலையம் செல்லும்போது நிறைய கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குகளுக்கும் என்னை வரசொல்லி பார்வை மகசரில் கையொப்பம் வாங்குவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான்.

District Munsif Cum Judicial Magistrate,
Athoor